அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/95

எனது இல. I/ 543 E/02 D/02/94 (II)
அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1995, பெப்ரவரி மாதம் 23 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**1994-09-09 ஆந் திகதியிடப்பட்ட சம்பள மீளாய்வு,**
**முரண்பாடுகள் குழு அறிக்கை - இடைக்கால கொடுப்பனவு**

1994-08-12 ஆந் திகதிய 33/94 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் மீது உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

02. அரசாங்கத்தால் 1994-08-12 ஆந் திகதிய 33/94 ஆம் இலக்கமுள்ள அரசாங்க நிருவாக சுற்றறிக்கையால் சில சேவைகளுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட ஓய்வூதியத்துக்கு கணக்கெடுக்கப்படாத இடைக்கால கொடுப்பனவு தொடர்பாக கீழ் வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

I பொறியியலாளர் சேவை விலங்கு உற்பத்தி சேவை விவசாய சேவை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவுகளை அந்த சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு சம்பள ஆட்கோப்புக் குழுவினால் சம்பளம் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொண்டு மறுபடி தீர்மானம் எடுக்கும் வரை தொடர்ந்தும் வழங்குதல்.

II அந்த இடைக்கால கொடுப்பனவை கீழ் காட்டப்படும் சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் 1994-07-01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும் வண்ணம் அந்த அடிப்படையில் வழங்குதல்.

- (அ) அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிகச் செயலாளர்கள் - மாதத்துக்கு 2000/- ரூபா.
- (ஆ) இலங்கை நிருவாக சேவை.
- (இ) இலங்கை கல்வி நிருவாக சேவை.
- (ஈ) இலங்கை கணக்காளர் சேவை.
- (உ) இலங்கை திட்டமிடல் சேவை
- (ஊ) வைத்திய சேவை ( நிபுணர்களும் நிபுணர்களல்லாதோரும்)
- (எ) இலங்கை விலங்கு உற்பத்தி சுகாதார சேவை.
- (ஏ) சம்பள, ஊழியர் கோப்புக் குழுவால் தனித்தனியாக அடையாளம் காணப்படும் பிற சமாந்தர முகாமைச் சேவைகள்.

03. மேல் (ஆ) தொடக்கம் (எ) வரையிலான சேவைகளுக்கு இடைக்கால கொடுப்பனவு கீழ்வருமாறு செலுத்தப்படும்.

II ஆம் வகுப்பு II ஆம் தரம் மாதம் ரூபா 1600/-
II ஆம் வகுப்பு I ஆம் தரம் மாதம் ரூபா 1750/-
I ஆம் வகுப்பு மாதம் ரூபா 2000/-

04. மேல் (ஏ) பிரிவில் காட்டப்பட்டுள்ள சேவைகளுக்கு செலுத்தல்களை செய்யும் முறை சம்பள, ஊழியர் கோப்புக் குழுவால் தீர்மானிக்கப்படும்.

05. அந்த சேவைகளில் பதவிகளை வகித்து இளைப்பாறியதும் மறுபடி அதே பதவிகளில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் அந்தப் பதவியை வகிக்கும் வரை இந்த கொடுப்பனவை செலுத்தலாம்.

06. தயவுகூர்ந்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: ஆர். எஸ் ஜயரத்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக்
கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.